அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 187

எனது இல.543இ.193/45டிடி.
தாபனப் பகுதி,
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1981, சனவரி மாதம் 29 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள் யாவர்க்கும்.

**அரசாங்க யாக்கங்களிலும் நியதிச்சட்ட சபைகளிலும் உள்ள தொழிற்றுறைத் தகைமைபெற்ற ஆளணியினர்க்கு நியம வேதனத் திட்டங்களைத் தீர்மானித்தல்.**

மேற்படி விடயம் பற்றி மாண்புமிகு கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சர் சமர்ப்பித்த ஓர் அமைச்சரவை விஞ்ஞாபனம் குறித்து 1980.12.22 ஆந் தேதியன்று அமைச்சரவை செய்த தீர்மானத்தைக் கவனிக்குமாறு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள். அத்தகைய ஆளணியினர்க்கு மாதமொன்றுக்கு 3,500/- ரூபாவை உச்ச எல்லையாகக் கொண்ட வேதனத் திட்டங்கள் வகுத்தமைக்கப்படுவதற்கு அமைச்சரவை அதிகாரமளித்துள்ளதுடன்,

(அ) இவ் வேதனத் திட்டங்கள் நிறைவேற்று தரங்களுக்கு மட்டுமுரியதாகவிருத்தல் வேண்டும்;

(ஆ) தொழிற்றுறைத் தேர்ச்சிகளும் தகைமைகளுமுடையவர்கள் மட்டுமே இம் மீளவாய்ந்த வேதனத் திட்டங்களினால் நன்மை யடைதல் வேண்டும்

என்னும் நிபந்தனைகளுக்குட்பட்டே வேதனத் திட்டங்கள் வகுத்தமைக்கப்படுதல் வேண்டும்.

ஒப்பமிட்டவர்: டி.பி.ஐ.பி.எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

கிசி/